# வெஜ்ஜி பஸார் வெங்கடேசன்

## “அமெரிக்காவிலிருந்து ஆன்லைனில் அம்மாவுக்கு அரைகிலோ கத்திரிக்காய்”

**ப**த்து ஆண்டுகளுக்கும் மேல் ஒரு பன்னாட்டு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் நல்ல பதவியிலிருந்த வெங்கடேசனுக்கு, உலகப் பொருளாதாரச் சரிவினால் அவர் பணியாற்றிய நிறுவனம் சம்பளக் குறைப்பு, பதவிக் குறைப்பு செய்யத் தொடங்கிய பொழுது எழுந்த எண்ணம் தனக்கென ஒரு சொந்தத் தொழில்.

பொதுவாக புதிய தொழில் செய்ய விரும்புபவர்கள் வெற்றியடைந்த மாடல்களைத்தான் பின்பற்றுவார்கள். மாறுதலாக ஒரு தோல்வியடைந்த தொழிலைத் தேர்ந்தெடுத்து, ஏன் அவர்கள் வெற்றி பெற முடியவில்லை என்பதை ஆராய்ந்து கண்டுபிடித்து, அதைச் சீராக்கி இவர் தொடங்கிய தொழில் ‘வெஜ்ஜி பஸார்’ என்ற ஆன்லைன் காய்கறி, கனிகள் வியாபாரம். யோசனையையும் திட்ட வடிவையும் சொன்னவர் மனைவி நிர்மலா.

சில ஆண்டுகளுக்கு முன் இதே முயற்சியில் ஈடுபட்டு 2 கோடி நஷ்டத்துடன் கையைச் சுட்டுக்கொண்ட இளைஞர்களைப் பற்றி அறிந்திருந்தும் துணிவுடன் 2009ல் தொடங்கி வெற்றிகரமாகச் செய்துகொண்டிருக்கிறார். காய்கறிகள் பழங்கள் வாங்க மார்க்கெட் போகவேண்டாம். கம்ப்யூட்டரில் ஆன் லைனில் பார்த்து ஆர்டர் செய்தால், வீடு தேடி வரும் என்பது மட்டுமில்லை. அவசியமானால் அழகாக நறுக்கிய வடிவில் வந்து சேரும் என்பது இவர் உருவாக்கியிருக்கும் பிசினஸ் மாடல்.

இவரது வெஜ்ஜி பஸார் வெப்ஸைட்டில் 54 விதமான காய்கறிகள் படங்களுடன் கேட்லாக் செய்யப்பட்டிருக்கிறது. படத்தை கிளிக் செய்தால் அதன் அன்றைய விலை, நறுக்கிய வடிவில் விலை எல்லாம் வரும். அதைப் பார்த்து ஆர்டர் செய்து கிரிடிட் அல்லது டெபிட் கார்டுகள் மூலம் பணம் செலுத்தினால் காய்கறிகள், பழங்கள், வாடிக்கையாளர்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

கடிகாரத்துடன் போட்டியிட்டு வேலைகளைச் செய்துவிட்டு, அலுவலகத்துக்கு ஓடும் தாய்மார்களுக்கு இது வசதியாயிருக்கிறது. இன்று 5000 வாடிக்கையாளர்களிருக்கும் இவரது நிறுவனத்தை ஒவ்வொரு நாளும் 100 வாடிக்கையாளர்களுக்கும் மேல் பயன்படுத்துகின்றனர். ஆய்ந்த கீரை, நறுக்கிய சேனை, கருணைக் கிழங்குகளுக்கு தினமும் ஆர்டர்கள் வருகிறதாம். தினசரி தேவை காய்கறிகளைத் தவிர வாரம் முழுவதுக்குமான, கர்ப்பிணிகளுக்கு, குழந்தைகளுக்கு என பேக்கேஜுகளும் வைத்திருக்கிறார்கள்.

‘‘பிடித்தமான பாடலை லேப்டாப்பில் கேட்டுக்கொண்டே 15 நிமிடத்தில் அடுத்த 3 நாட்களுக்கு வேண்டிய காய் கறி ஷாப்பிங்கை செய்துவிட முடிகிறது. நேரம், பெட்ரோல் செலவு மிச்சம்,’’ என்கிறார் ஜனனி. இவர் இரவு பகலாக 16 மணி நேரம் உழைக்கும் சாஃப்ட்வேர் இன்ஜினீயர்.

‘‘காய்கறிகள் சூடான நீரிலும், குளிர்ந்த நீரிலும் கழுவப்பட்டு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களில் அழகாக விதவிதமாக நறுக்கி பேக் செய்யப்படுகிறது. சில நிமிடங்களில் ஒவ்வொரு வகைக் காய்கறிகளையும் அதேற்கேற்ற வடிவில் நறுக்கிக் குவிக்கிறது. ஆர்டர்களின் நம்பர் இடப்பட்ட பைகளில் நிரப்பி அனுப்பப்படுகிறது.

பெரிய சாஃப்ட்வேர் நிறுவனங்களில், தொழிற்சாலைகளில் நிறுவனங்களின் அனுமதியுடன் இந்தத் திட்டம் செயல்படுகிறது. தங்கள் பெயருடன் காத்திருக்கும் காய்கறி கவரை வீட்டுக்குப் போகும்முன் அலுவலகத்திலிருந்தே எடுத்துச் செல்லலாம். இந்தப் புது முயற்சிக்கு நல்ல வரவேற்பிருக்கிறது,’’ எனச் சொல்லும் இவர், இப்போது அதைப் பல அலுவலகங்களில் அறிமுகப்படுத்தவிருக்கிறார்.

வெங்கடேசனின் இந்தப் பணியில் துணை நிற்பவர் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் சாஃப்ட்வேர் இன்ஜினீயராகயிருக்கும் அவரது மனைவி நிர்மலா. அலுவலக வேலைக்குப் பின் இதைச் செய்கிறார்.

ஆன்லைனில் வந்த சில ஆர்டர்களில் அமெரிக்க விலாசமிருந்ததைப் பார்த்து ஆச்சர்யப்பட்ட இவர் அறிந்து கொண்ட விஷயம்: அவை அமெரிக்காவிலிருக்கும் ஒரு பெண் அடையாரிலிருக்கும் தனது பெற்றோர்களுக்காக ஆர்டர் செய்தது என்பது. ‘‘ஆன்லைனில் காய்கறிகள் பழங்கள் விற்பனை என்பது எளிதான பிஸினஸ் இல்லை. விலை, தரம் சரியான நேரத்தில் டெலிவரி எல்லாம் எல்லா நாளும் சரியாகயிருக்க வேண்டும். நாங்கள் அதில் மிகக் கவனமாகயிருப்பதால் வேகமாக வளருவோம் என நம்பிக்கையோடுயிருக்கிறோம். ஆர்வமுள்ள இளைஞர்கள் தங்கள் ஊர்களில் துவக்கலாம்’’ என்கிறார்கள் இந்த தம்பதியினர்.

செய்தி: **ரமணன்**
சித்திரம்: **குஹன்**



